RESEARCH ARTICLE

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1128

# பாரதியின் மொழி ஆளுமை

வெ. விஜயலட்சுமி [அ, *]

[அ] தமிழ்த்துறை, பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்-641014, தமிழ்நாடு, இந்தியா

# Bharthi's Language Personality

V. Vijayalakshmi [a, *]

[a] Department of Tamil, PSG College of Arts & Science, Coimbatore-641014, Tamil Nadu, India

* Corresponding Author: vijayalakshmi@psgcas.ac.in

Received: 18-08-2021
Revised: 17-07-2022
Accepted: 26-07-2022
Published: 10-09-2022

Check for updates

**ABSTRACT**

Bharathi was the one who came to refine this world with his singing talent. He showed a new way to high Tamil who showed good manners. He stepped into the world of journalism at a time when nationalism was floating in Tamil Nadu. He was a multilingual scholar. Apart from his mother tongue, Tamil, he was proficient in English, French, Telugu, and Sanskrit. However, he compares Tamil with these languages and praises it as a superior classical language. Bharathi, who was born in the southern part of Tamil Nadu as a moon, came to protect the pride and heritage of our culture and to remove the darkness of slavery. He came to practise this because of singing. He used the Tamil language as a weapon to oppose the white man and as a flower for the people. Language is a tool of communication. There is nothing special about it. Its special ability is revealed in the one who handles the language. Pavendher, while referring to Bharathi's language, has mentioned that Tamil was qualified by Bharathi because he enriched the Tamil language with his poetry. The work will affect everyone who reads Bharathi's work. A Tamil will forget himself and become attached to the Tamil language and the Tamil nadu. In the hearts of the enslaved people, he raised the voice of struggle for the freedom and rights of the individual. His linguistic personality is the reason for such pride. He extols the pride of the Tamil language by saying, "Among all the languages that I've known, there's none as sweet as Tamil." This shows his attachment to the Tamil language. The goal of this investigation is to show how his attachment to his mother tongue has revealed language personality in his works.

**Keywords:** Language Personality, Freedom, Bharathiyar Work, Pavendher

## முன்னுரை

மொழி என்பது ஒரு கருத்துப் பரிமாற்றக்கருவி. அதைப்பேசும் இனத்தின் கலை, வரலாறு, பழக்கவழக்கம், ஒழுக்க நெறிகள் போன்ற பல வாழ்வியல் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு விளங்குகிறது. மனிதன் தனது எண்ணத்தையும், சிந்தனையையும் வெளிப்படுத்தும் ஊடகமாகவே மொழி செயல்படுகிறது. மொழியில் ஒலியே முக்கியத்துவம் பெறுகிறது. அவ்வகையில் தமிழ் மொழியை அதன் ஒலிப்பு முறையால் இசையாகக் பாடி, கவிதைகளாய் மக்கள் மனதில் பதிய வைத்தவர் பாரதி.

## பாரதியின் மொழிப் பற்று

பாரதியை அதுவரையில் பார்த்திராத வ. ரா அவரைப் பார்ப்பதற்காகச் சென்றிருந்தார். வ. ரா அவரை வணங்கியவுடன் யார்? என்று வினவுகிறார். அப்போது வ. ரா தன்னை ஆங்கிலத்தில்

அறிமுகப்படுத்தத் தொடங்குகிறார். உடனே பாரதி, “அடே பாலு! வந்தவர் உனக்கு இணையாக இங்கிலீஷ் பொழிகிறாரடா! அவரிடம் நீபேசு. எனக்கு வேலையில்லை” என்று உரக்கக் கூறிவிட்டு, பின்னர் வ. ராவிடம் ஒரு தமிழன் மற்றொரு தமிழனோடு இன்னும் எவ்வளவு காலம் ஆங்கிலத்திலேயே பேசவேண்டும்? என்று வருத்தப்பட்டிருக்கிறார். இது வ. ரா வின் வாழ்வில் நிகழ்ந்த சம்பவமாகும். பாரதியின் மொழிப் பற்றினையும் ஆங்கிலத்தின் மீது கொண்ட சினத்தினையும் இதன் மூலமாக நாம் அறியமுடிகிறது.

தமிழர் பிற மொழிமீது கொண்ட பற்றினைக் கண்ட பாரதி பொறுக்காது, செல்வத் தமிழின் தொடர்பற்றுப் போனார் எனத் தமிழ் மக்களை இடித்துரைக்கிறார். தமிழ் மொழியைச் செல்வம் என்ற உயர்ந்த சொல்லைப் பயன்படுத்தி போற்றுகிறார். வறுமையில் உழன்றவர்க்கே செல்வத்தின் பெருமை தெரியும்.

பாரதி பிறந்த காலத்தில் தமிழ் மொழியும், மக்கள் சமூகமும் அவ்வளவாக நல்ல நிலைமையில் இல்லை. ஏங்கிக் கிடந்த தமிழர்கள் தூங்கிக் கிடந்த தமிழ்மொழி - இதுதான் பாரதி கண்டது. இந்நிலையிலிருந்த தமிழர்களை மாற்றி ஊக்கமும், உள்வலியும் ஏற்படச் செய்தது பாரதியின் அசாத்தியமான பணியாகும் என்றுரைக்கிறார் வ.ரா.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் வலிமை பெற்ற மொழியாக ஆங்கிலம் விளங்க, தமது தமிழ்க் கவிதைகளாலும், படைப்புகளாலும் தேசபக்தி, பெண்ணியம், ஒருமைப்பாடு, சமூகச் சீர்திருத்தம் எனப் பல்வேறு கோணங்களில் தமது ஆளுமையை வெளிப்படுத்தியவர் பாரதி. தமிழ் நாட்டில் தமிழுக்குரிய இடத்தில் இருந்தது ஆங்கிலம். பிறமொழி கற்கும் மக்கள் அதனால் பெருமை கொள்வதைக் கண்ட பாரதி,

“வேறுவேறு பாஷைகள் கற்பாய் நீ

வீட்டுவார்த் தை கற்கிலாய் போ போ போ”

என்று பாடுகின்றார் (Bharathiyar, 1992).

தமிழர்கள் தமிழைப் பேசுவது இழிவு என்று தாய்மொழியைப் புறக்கணித்து ஆங்கிலத்தை மட்டும் அறிவின் அடையாளமாகக் கருதும்போது, ஆங்கிலம் என்பது அறிவு அல்ல, அதுவும் ஒரு மொழியே என்கிறார். தமிழ் நாட்டிற்கு வந்த காந்தி திருவல்லிக்கேணியில் நடந்த கூட்டத்தில் ஆங்கிலத்தில் பேசியதற்காக பாரதி காந்திக்கு எதிர்ப்புக் கடிதம் ஆங்கிலத்தில் எழுதுகிறார். அதைக் கண்ட காந்தி, எனில் இக்கடிதத்தை ஏன் ஆங்கிலத்தில் எழுதினீர்கள்? எனக் கேட்க, பாரதி, “பிறர் மனம் நோக எழுதும்போது அன்னைமொழியைப் பயன்படுத்தக் கூடாது” என்பது எங்கள் பண்பாடு எனப் பதில் அளித்துள்ளார்.

டாக்டர் மு.வ. அவர்களும் பின்தங்க நேரும் என்ற தமது கட்டுரையில் பிறமொழி பேசுவதை மக்கள் அதிகம் விரும்புவதாகவும், அதையே பெருமையாகக் கொள்கின்றனர் என்றும் குறிப்பிட்டுள்ளார். கற்கும் கல்வி நாட்டு மக்களுக்குப் பயன்பட வேண்டுமானால் நாட்டு மக்களின் மொழியே பயிற்சி மொழியாக அமைய வேண்டும் என்கிறார். இல்லையானால் பிறமொழி வாயிலாகக் கற்றவர்கள் தனிச் சாதியாக அமைந்துவிடுவார்கள். மற்றவர்களுக்குப் பயன்படாத ஒரு கூட்டமாக மற்ற மக்களைச் சுரண்டும் கூட்டமாக அது அமைந்துவிடும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பாரதியார் தம் கவிதைகளில் பிறமொழிச் சொற்கலப்புடன் எழுதுவதைப் பலரும் குற்றம் சாட்டியுள்ளனர். என்றாலும் அதை மக்களுக்குப் புரியும் வகையிலேயே எளிமையாக அமைத்துள்ளார்.

## பாரதியின் சொல் ஆளுமை

சொற்களின் திறனறிந்து அவை ஆளப்பெறும் முறைமையை பாரதியின் படைப்புகளில் காணமுடிகின்றது. சொல்லின் பொருள், அதனை விளக்கும் தன்மை, படிப்பவருக்கு இனிமை நல்கும் திறம், ஓசையின்பம், சொற்சுருக்கம், விழுமியது பயக்கும் மாண்பு, செறிவு போன்றவை பாரதியின்

கவிதைகளில் கவித்துவம் நிறைந்ததாக அமைந்துள்ளன. மனமெனும் பெண்ணே எனத் தொடங்கும் பாடலில்,

"புலன் புலப் படுத்தும் புலனா யென்னை

உலக உருளையில் ஒட்டுற வகுப்பாய்"

என சொல் விளையாட்டை உருவாக்கியுள்ளார் (Bharathiyar, 2019). மற்றொரு கவிதையில் உரு சொல்லை பல முறைப் பயன்படுத்தி வெவ்வேறு பொருளை உணர்த்தியுள்ள பாங்கும் போற்றுதற்குரியது.

## பாரதியின் மொழி ஆளுமை

படைப்பாளனின் மொழி ஆளுமை என்பது, பாடுபொருள், அதன் தன்மை, அப்பொருள் படைப்பாளியால் வெளிப்படுத்தப்பட்டுள்ள பாங்கு, நடை உத்திகள், அலங்காரப்பண்புகளைப் பொறுத்து அமைகின்றது. படைப்பாளனின் உள்ளத்து உணர்வும் படைப்பில் உரியவாறு வெளிப்படுமாயின் அப்படைப்பு ஆளுமைப்பண்போடு வெளிப்படுகின்றது. அவ்வகையில் மொழி ஆளுமையை வெளிப்படுத்தி வெற்றி பெற்றவர்களுள் வள்ளுவரும், கம்பரும், பாரதியும் ஆவர் என்கிறார் இ. சுந்தர மூர்த்தி. எனில் ஒரு படைப்பின் வெற்றிக்கு மொழி ஆளுமைத் திறன் இன்றியமையாததாகின்றது.

"பா ரதம் கொண்டு பாரதம் வலம் வந்தவன் பாரதி"

பாரதி குழந்தைகளுக்காகப் பாடிய பாப்பாப் பாட்டில் குழந்தைகளுக்குப் பல்வேறு அறிவுரைகளைக் கூறுகிறார். ஓடி விளையாடு பாப்பா பாட்டில் இளம் உள்ளத்தில் எளிய இனிய தமிழ்ச் சொற்களால் தமிழின் உயர்வினை எடுத்துரைக்கின்றார்.

"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே - அதைத்

தொழுது படித்திடடி பாப்பா"

என்று தமிழ் மொழியை வணங்கிப் படித்திடக் கூறுகின்றார் (Bharathiyar, 1992).

பொதுவுடைமைச் சிந்தனையைத் தம் பாட்டின் மூலம் மக்களுக்குத் தெளிவுபடுத்தியவர் பாரதி, சமுதாயத்தை மாற்றக்கூடிய, விழிப்புணர்வு ஊட்டக்கூடிய வரிகளைத் தம் படைப்புகளில் வெளிப்படுத்தியவர். பொது என்ற சொல்லும் உடைமை என்ற சொல்லும் தமிழில் உள்ள சொற்களே எனினும், பொதுவுடைமை என்ற புதியதோர் சொல்லாட்சியை ஏற்படுத்தியவர். பழைய சொற்களுக்குப் புதிய பொருட்சுவையை ஏற்படுத்தும் மொழி ஆளுமை பாரதிக்கு உண்டு.

"முப்பது கோடி சனங்களின் சங்கம்

முழுமைக்கும் பொதுவுடைமை"

என்று ஒப்பில்லாத கமுதாயமாக, உலகத்திற்கொரு புதிய சமுதாயமாக நம் நாடு விளங்கப் போராடியவர் பாரதி. காலம் தந்த கவிஞன் (Bharathiyar, 2008). அவரது உரிமைக்குரல் இல்லையெனில் விடுதலை வேட்கை இல்லை. தமிழ் மொழிக்கு மகுடமாய் அவரது மொழி ஆளுமைத் திறன் மேலோங்கி நின்றது.

அவரது மொழி ஆளுமை பாக்களில் மட்டுமின்றி வசன கவிதைகளிலும், உரைநடையிலும், கட்டுரைகளிலும் மேலோங்கி நிற்கிறது. அதோடு தாய்மொழியின் பெருமையையும் குறிப்பிடுகின்றார். எங்கும் எதிலும் தமிழ் இருக்கவேண்டும். எல்லாத்துறைகளிலும் தமிழைப் புகுத்தவேண்டும் அப்போதுதான் தமிழ் செழிக்கும் என்கிறார்.

"வானை அளப்போம் கடல் மீனை அளப்போம்

சந்திரைமண் டலத்தியல் கண்டுதெளி வோம்"

என்றும்,

“வான மளந்த தனைத்தும் அளந்திடும்

வண்மொழி வாழிய வே”

என்றும் தமிழின் சிறப்பினை பாரதியன்றி யாரால் வாழ்த்த முடியும்? சிறப்பு நிலையில் தமிழ் நிலைபெற்றிருக்க வேண்டுமானால் ஆக்கப்பூர்வமான பணிகள் சிலவற்றைத் தமிழுக்குச் செய்யவேண்டும் என்கிறார் (Bharathiyar, 2019).

“சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்

தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்” (Bharathiyar, 1992).

மக்கள் உயர் நிலையை அடைய வேண்டுமெனில், தமிழைத் தமிழ் நாட்டின் தெருக்களில் முழங்கச் செய்யவேண்டும் என்று கூறியதோடு நின்றுவிடாமல், எண்ணத்தின் கருவிகளாய் விளங்கும் சொற்கள் பாரதியின் சிந்தனை ஆற்றலை வெளிப்படுத்தி அவரது மொழி ஆளுமையைப் புலப்படுத்தி நிற்கின்றது. மேலும்

“தேமதுரத் தமிழோசை உலகமெலாம்

பரவும் வகை செய்தல் வேண்டும்”

உலகமெங்கும் தமிழ்மொழி பரவவேண்டும் என்பதையும் அறிவுறுத்துகின்றார் (Bharathiyar, 1992).

தமிழ் மொழியை வளப்படுத்த வேண்டுமானால் பிறநாட்டு சிறந்த அறிஞர்களின் நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்கவேண்டும் என்றும், புகழ்தரக்கூடிய புதிய நூல்கள் உருவாக வேண்டும் என்றும் குறிப்பிடுகின்றார்.

“பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்

தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்

இறவாத புகழுடைய புதுநூல்கள்

தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்”

எல்லாக் காலத்திலும், எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய, எல்லோருக்கும் பொருந்தக்கூடிய உயர்ந்த கருத்துக்களைக் கொண்ட இலக்கியங்கள் புகழுடைய இலக்கியங்களாகத் திகழும். அறிவியல் துறையில் முன்னேறிக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் அறிவியல் கூறுகள் மேலைநாட்டு மொழிகளில் இருப்பதைப்போலத் தமிழில் இல்லை (Bharathiyar, 1992). அறிவியல் கூறுகளைச் சொல்லும் திறமை தமிழ் மொழிக்கு இல்லை என்றும், தமிழ்மொழி மெல்ல மெல்ல அழிந்துவிடும் என்றும் ஓர் அறிவிலி உரைத்தான். அவன் கூறிய அந்தச் சொல் மெய்யாகி விடுமோ? என்று பாரதி அஞ்சுகிறார். அந்த அச்சத்தை,

“மெல்லத் தமிழினிச் சாகும் - அந்த

மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்”

என்று வெளிப்படுத்துகிறார் (Bharathiyar, 2008). இந்நிலையை மாற்ற உலகின் அனைத்து நாடுகளுக்கும் சென்று தமிழ் மொழியை வளப்படுத்துங்கள் என்கிறார்.

“சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கல்விச்

செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்”

என்ற உணர்ச்சி மிகு வரிகளால் தமிழரைத் தட்டி எழுப்புகிறார் (Bharathiyar, 1992). கண்களால் காண்பது பொய் என்பதை “காட்சிப்பிழை” என்ற அருமையான சொல்லாடலைப் பயன்படுத்தியுள்ளார்.

## முடிவுரை

"நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலா" பழைய சொற்களுக்குப் புதிய பொருட்சுவையை ஏற்றிய தனித்துவம் மிக்க கவிஞன் பாரதி. அடிமை இருளை நீக்க சுதந்திரப்பள்ளு பாடத்தொடங்கியது பாரதியின் புதுமைக்குரல். பிறமொழி கற்க விரும்பும் நிலை மாறி தமிழர்கள் தம் தாய்மொழிமீது பற்று கொள்ள வேண்டும், அப்போதுதான் மொழி வளரும் என்பதை மக்கள் மனதில் ஆணித்தரமாக விதைக்க அவர் எடுத்த முதல் ஆயுதம் கவிதை. தம் மொழி ஆளுமை கொண்டு தமிழுக்கு மணிமகுடம் சூட்டியவர். தம்கவித் திறத்தால் ஒரு சமுதாயத்தை மாற்றியமைக்க இயலும் என்பதை உறுதியாக நம்பிய தீர்க்கதரிசி பாரதி. எளிய தமிழில் பாமரரும் புரிந்து கொள்ளும் வகையில் தம் படைப்பாளுமையை வெளிப்படுத்திய பாங்கினையும், மொழி ஆளுமையையும் எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

## References


Bharathiyar, (1992) Bharathiar Kavithagal, Kumaran Kumaran Pathippagam, Chennai, India.

Bharathiyar, (2019) Bharathiyar Kavithaigal, Tirumagal Nilayam, Chennai, India.

Bharathiyar, (2008) Bharathiyar Kavithaigal, Tirumagal Nilayam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License